ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஹரிஸமய திவாகரம்.

தொகுதி உ. குரோதனஹூ கார்த்திகைமீ பகுதி கக.

Vol. 2. NOVEMBER & DECEMBER 1925. No. 11.

வாலிவத சமாதானம்.

ஸ்ரீ ராமபிரான் வாலியை வதைத்தது நியாயமன்றெனச் சிலர் அபிப்பிராயப்படுகிறார்களாதலால் அதுவிஷயம் இங்கு ஆராய்ந்துரைக்கப்படும்.

ஸ்ரீய: பதியாகிய ஸர்வேசுவரன் எல்லாச் சராசரங்களுள்ளும் புறம்பும் நிறைந்துநின்று ரக்ஷிக்கின்றானாதலால் இவனை,

"நீராய்நிலனாய்த்தீயாய்க்காலாய்நெடுவானாய்
சீரார்சுடர்களிரண்டாய்ச்சிவனாயயனானாய்" என்றும்,

"ஆயேயிவ்வுலகத்துநிற்பனவுந்திரிவனவும்
நீயேமற்றொருபொருளுமின்றிநீநின்றமையால்" என்றும்,

"வையம்வானம்மனிசர்தெய்வம்மற்றுமற்றுமுற்றுமாய்" என்றும்,

உள்ள அருளிச்செயல்களின்படி எல்லாமாய் நிற்கின்றானென்று சொல்வதுண்டு. இதுநிற்க, ஸர்வேசுவரனென்ற சொற்பொருளை ஆராய்ந்தால் எல்லா ஐசுவர்யங்களையு முடையவனென்பது விளங்கும். எல்லா ஐசுவர்யங்களுமாவன:- நித்ய விபூதியாகிய மோக்ஷத்திலும், லீலா விபூதியாகிய இவ்வுலகத்திலும் உள்ளவைகளாம். ஐசுவர்யத்தையுடைய எஜமானன் ஐசுவர்யத்தைப் பாதுகாப்பதற்குக் கடமைப்பட்டவனாவான். ஆகவே அவன் ஸர்வரக்ஷகனென்பது தானே கிடைக்கிறது. இதனால் இவன் "தேவாநாம்தாநவானாஞ்ச ஸாமாந்ய மதிதேய்வதம்" என்று எல்லோருக்கும் பொது நின்ற தெய்வமாயிருக்கின்றானென்று சொல்லப்பட்டது.

இப்படிப் பொருந்நின்ற தெய்வமாகிய ஸர்வேசுவரன் தன்னைத் தஞ்சமாகப்பற்றிய பெரியார்களைக் கொண்டு இவ்வுலகைப் பாது காக்கிறான். பெரியார் உபதேசவழியாக உலகிற்குத் தர்மமார்க் கத்தை அறிவித்து உலகை நல்வழிப்படுத்துகிறார்கள். இவர்கள் உபதேசமில்லா தொழிந்தால் உலகினர் தர்மத்தை அறியமாட்டார் கள். அறியாநிலைமை வந்தகாலத்து உலகம் இனிது நடைபெறாது வருந்தும். இதுபற்றியே தெய்வப்புலமைத் திருவள்ளுவரும் முத வில் ஜகத்காரணமாகிய கடவுளைக் 'கடவுள் வாழ்த்து' என்ற அதி காரத்தால் கூறி அதன்பின் கடவுள் ஆஜ்ஞையால் உலகமும், அதற் குறுதியாகிய அறம்பொருளின்பங்களும் நடத்தற் கேதுவாகிய மழையை 'வான் சிறப்பு' என்ற அதிகாரத்தாலுரைத்து அதன்பின் அற முதலிய பொருள்களை உலகிற்கு உள்ளபடி உபதேசிக்கின்ற பெரியார்களின் பெருமையை 'நீத்தார்பெருமை' என்ற அதிகாரத் தாற் கூறினார். இதனால் பெரியார்களின் உபதேசமில்லாதபோது உலக மினிதுநடைபெறாதென்பது பெறப்படும். இத்தகைய பெருமையுடைய பெரியார்களுக்கு ஹிரண்ய ராவண அசுர ராக்ஷ ஸர்களால் நலிவு ஏற்படுகிற காலத்தில் அவர்களின் உபதேசங்குன்றி அதர்மம் மேலிடும். இதுவிஷயம் *தண்டகாரண்ய வாசிகளான மஹருஷிகளின் வாக்யங்களால் அறியலாம்.

---

* "இரக்கமென்றொருபொருளிலாதநெஞ்சினர்
அரக்கரென்றுளர்சிலர்அறத்தினீங்கினர்
நெருக்கவும்யாம்படர்நெறியலாநெறி
துரக்கவுமருந்தவத்துறையுணீங்கினோம்"

"மாதவத்தொழுக்கமும்மறைகள்யாவையும்
ஓதலெமோதுவார்க்குதவலாற்றலெம்
மூதெரிவளர்க்கிலெமுறையினீங்கினெம்
ஆதலினந்தணரேயுமாகிலேம்"

என்று தண்டகாரண்ய வாசிகளான முனிவர்கள் இராமபிரானை நோக்கி ராக்ஷஸர்களுடைய ஹிம்ஸையால் எங்கள் தர்மாநுஷ்டானங்களும், பிறருக்கு உபதேசிப்பதுமொழிந்துவிட்டபடியால் யாங்கள் அந்தணாளராகின்றோமில்லை என்று கூறினார்கள்.

உலகிற்கு உயிர்போலச் சிறந்துவிளங்கித் தம் முபதேசத்தால் உலகைப் பாதுகாக்கின்ற பெரியார்கட்கு இப்படிப்பட்ட துன்பம் நேர்ந்தகாலத்தில் அதை ஒழிப்பதற்கு ஸர்வேசுவரன் அவதரிக்கிறான். இதனால் ஸர்வேசுவரனுடைய அவதாரத்திற்கு முக்ய ப்ரயோஜனம் ஸாதுக்களை ரக்ஷிப்பதேயாம். இக் கருத்துப்பற்றியே கண்ணபிரான் கீதையில்

*"பரித்ராணாய ஸாதூநாம் விநாசாயச துஷ்க்ருதாம்
தர்மஸம்ஸ்தாபநார்த்தாய ஸம்பவாமியுகேயுகே"

என்று அருளிச்செய்தான்.

பொதுநின்ற தெய்வமாகிய ஸர்வேசுவரன் ஸாதுக்களை ரக்ஷிக்க அவதரித்துத் தர்மங்களை நிலைநாட்டுகிறான் என்றதினால் அவன் அவதரித்துச் செய்த செய்கையெல்லாம் நிஷ்பக்ஷபாதமாயிருக்குமேயன்றிப் பக்ஷபாதமுடையனவா யிருக்கமாட்டா. இதனாலும் ராமபிரான் வாலியை வதைத்தது தர்மமாம் என்பது புலப்படும். இனி இது விஷயமான பல ஆக்ஷேபணையும், அவற்றிற்குச் சமாதானமும் உரைக்கப்படும்.

ஸ்ரீராமபிரான் கட்டளையை மேற்கொண்ட சுக்ரீவன் வாலியுடன் மல்யுத்தஞ் செய்துகொண்டிருந்த காலத்தில் வாலி,

"அயிர்த்தசிந்தையனந்தகன்குலகுலந்தஞ்சச்
செயிர்த்துநோக்கினன்சினத்தொடுசிறுநகைசெய்யா
வயிர்த்தகையினுங்காலினுங்கதிர்மகன்மயங்க
உயிர்த்தலந்தொறும்புடைத்தனனடித்தனனுதைத்தான்"

---

* இந்த சுலோகத்தில் ஸாதுக்களை ரக்ஷிப்பதே முக்யமாம் என்ற சிறப்புத்தோன்ற 'பரித்ராணாய ஸாதூநாம்' என்று முற்படக் கூறினார். பயிரைப் பாதுகாக்கக் களையெடுப்பதுபோல ஸாதுக்களை ரக்ஷிப்பதற்குத் துஷ்டர்களைப் போக்குவதாகிய கார்யம் நிகழும் என்பது தோற்ற 'விநாசாயச' என்று இழிவு சிறப்பும்மையால் கூறினார். தர்மம், இம்மை, மறுமை, மோக்ஷம் என்ற மூன்றையுங் கொடுத்து மற்றப் புருஷார்த்தங்களைக் காட்டிலும் வலியுடையதாயிருக்குமென்பது தோன்ற 'தர்மஸம்ஸ்தாபநார்த்தாய' என்று இறுதியில் கூறினார்.

என்றபடி சுக்ரீவனுடைய உயிர்நிற்கும் மர்மஸ்தான முதலிய இடங்களையெல்லாம் தன் கைகளால் குத்தியடித்தான். சுக்ரீவன் மயக்க முற்று நின்றான். அதுசமயம் இராமபிரான் சுக்ரீவன்மீ தருள் கொண்டு 'வாலியினுயிரை வாங்குவேன்' என்று மறைந்து நின்று ஓர் அம்பெய்தான். அந்த அம்பானது அவன் மார்பை ஊடுருவிச் செல்வதற்குமுன் தன் கை கால்களாலும், வாலினாலும் பற்றித் தடுத்து

"தேவரோவெனவயிர்க்குமத்தேவரிச்செயலுக்
காவரோவவற்காற்றலுண்டோவெனுமயலோர்
யாவரோவெனநகைசெயுமொருவனேயிறைவர்
மூவரோடுமொப்பான்செயலாமெனமொழியும்"

இந்த அம்பெய்தவர் தேவருமல்லர்; பிறருமல்லர்; இது, மூவருக்கும் முதல்வனுடையதா யிருத்தல்வேண்டும். 'ஆயினும் இதன் உண்மையை யறிவோம்' என்று அதை முறிக்கத் தொடங்கினான். அது வலியுடையதாயிருந்தது. இஃதென்ன இப்படியிருக்கின்றதே என்று அதை முற்றிலும் உற்றுநோக்கினான். அப்பொழுது,

"மும்மைசாலுலகுக்கெல்லாம்மூலமந்திரத்தைமுற்றும்
தம்மையேதமக்குநல்குந்தனிப்பெரும்பதத்தைத்தானே
இம்மையேயெழுமைநோய்க்குமருந்தினையிராமனென்னும்
செம்மைசேர்நாமந்தன்னைக்கண்களிற்றெளியக்கண்டேன்"

என்றபடி அதில் ராமநாமம் எழுதப்பெற்றிருப்பதைக் கண்டான். வேதவிதி தவறாமல் வாழ்ந்து கீர்த்திபெற்ற சூரியவம்சத்திற்பிறந்த ராமன் அந்தோ! என்னகார்யஞ் செய்தான். இதுவும் ஓர் தர்மமோர் முறையோ என்று கவலையும், முறுவலுங்கொண்டு குழியிலகப்பட்ட வலிய யானையைப்போல் துயரடைந்தான். அப்பொழுது அவன் எதிரில் இராமபிரான் தோன்றினான். வாலி இராமபிரானை நோக்கி,

"வாய்மையுமரபுங்காத்துமன்னுயிர்துறந்தவள்ளல்
தூயவன்மைந்தனேநீபரதன்முன்றோன்றினாயே
தீய்மைதான்பிறரைக்காத்துத்தான்செய்தாற்றீங்கன்றாமோ
தாய்மையுமன்றிநட்புந்தருமமுந்தழுவிநின்றாய்"

என்றபடி ஸத்தியத்தையும், தன்குலப் பெருமையையும் பாதுகாத்துத் தன்னுயிரைவிட்ட பரிசுத்தனாகிய தசரதனுக்குப் புதல்வனாயிருப்பவனே! எல்லாருக்குந் தாயாயிருக்குந் தன்மையுஞ், சிநேகிதத்

தன்மையும், தர்மத்தையும் தழுவிநின்றவனே! நீ மிகவும் உத்தம புருஷனாகிய பரதனுக்குத் தமையனாய்த் தோன்றினையன்றோ உனக்கு அவனுக்குரிய குணங்களொன்றுமில்லையே? இது நிற்க, தீய கார்யங்களைப் பிறர் செய்யவொட்டாமல் தடுத்துத் தான்மாத்திர மதைச்செய்தால் அது பிழையில்லையென்பதொன் றுண்டோ? இத் தகைய துர்க்குணங்களெல்லாம் உனக்குண்டாவதற்குப் பிறிதோர் காரணமுண்டென மதிக்கிறேன். அஃதாவது.—

"கோவியிற்றருமமுங்கள்குலத்துதித்தோர்கட்கெல்லாம்
ஓவியத்தெழுதவொண்ணுவுருவத்தாயுடைமையன்றோ
ஆவியைச்சனகன்பெற்றவன்னத்தையமிழ்தின்வந்த
தேவியைப்பிரிந்தபின்னைத்திகைத்தனைபோலுமென்றான்"

உனக்குயிரும் அமிர்தமும்போன்றவளாகிய ஜானகியை விட்டுப் பிரிந்ததினால் உன் குல தர்மமாகிய அரசியல்பை மறந்து திகைத் தனைபோலும்; என்பதாம். ஓர் அரக்கர்க்கரசன் பழியான கார்யத் தைச் செய்ததற்காக ஓர் குரக்கரசனைக் கொல்லுதற்கு மனுநெறி கூறியதுண்டோ? இரக்கமென்ற சிந்தையை எங்கொழித்தாய்? என் னிடத்தில் யாதுபிழை கண்டனையோ? தர்மத்தைப் போற்றத்தக்க நீயே பெரும் பழியான கார்யத்தைச் செய்வையாகில் இனிப் புக ழைத் தரிக்கத்தக்கவர்தான் யாருளர்? நல்லொழுக்கமும், மேன்மைக் குணமும் இழிந்தோர்கட்கு மாத்திரந்தான் வேண்டுமோ? உயர்ந் தோர்கள் இழிவான கார்யத்தைச் செய்தால் அவருக்குப் புகழே யன்றிப் பழியுண்டாகமாட்டாதோ? நீ உன்னாட்டிலே உன் தம்பிக் கரசுரிமை தந்ததுபோல இக் காட்டில் என் தம்பிக் கரசுரிமை தந் தனையோ? மூத்தோன் அரசு முறையன்றென்று கருதினையோ? உன் செயலிருந்தவாறென்னே! இருவர் மாறுபாடுற்றுப் போர்செய்வார்க ளாகில் நடுநிலைமையையுடைய ஒருவன் அவ் விருவருக்கும் சமமாக வன்றோ இருத்தல்வேண்டும். அங்ஙனமின்றி ஒருவன்பக்ஷத்தில் சேர்ந்துகொண்டு அம்பெய்வதும் தர்மமாகுமோ?

"வீரமன்றுவிதியன்றுமெய்ம்மையின்
வாரமன்றுநின்மண்ணினுக்கென்னுடல்
பாரமன்றுபகையன்றுபண்பொழிந்
தீரமன்றிதுவென்செய்தவாறுநீ"

நீ செய்த கார்யம் பராக்ரமமுடையதில்லை, வேதசாஸ்திரங்களில் விதிக்கப்பட்டதுமாகாது. உண்மையைச் சார்ந்ததுமன்று

உனக்கு நான் பகையுமில்லை. உன்னதாயிருக்கின்ற இந்த பூமிக்கு என்னுடல் பாரமாகுமோ? உனக்குப் பகைவனான இராவணனைக் கொல்வதற்குச் சுக்ரீவனைத் துணையாகக் கொண்டதானது யானையைக் கொல்கின்ற சிம்மத்தைவிட்டு ஓர் முயலைத் துணையாகப் பற்றியதுபோலாகும். தினந்தோறும் சஞ்சரிக்கின்ற சந்திரனுக்குக் களங்கமானது பண்டே அமைந்துள்ளதுபோல, சூரியவம்சத்திற்கு ஓர் நிலையான களங்கத்தை நீ பிறந்து உண்டாக்கினை. என்னை வலியப் போர்செய்வதற் கழைத்தவனாகிய சுக்ரீவனுக்குச் சகாயமாய் ஒளித்து நின்று அம்பெய்ததுமன்றி இப்பொழுதும் நாணமில்லாமல் என் முன்னிலையிலும் வந்து நிற்கின்றாயே

"நூலியற்கையுந்தங்குலத்துந்தையர்
போலியற்கையுஞ்சீலமும்போற்றலை
வாலியைப்படுத்தாயலைமன்னற
வேலியைப்படுத்தாய்விறல்வீரனே"

சாஸ்திரமுறையையும், உன் குலத்திற்றோன்றிய முன்னோர்களின் இயற்கையையும், நல்லொழுக்கத்தையும் பாதுகாக்காதொழிந்தாய் ஆதலால் நீ வாலியாகிய என்னைக் கொன்றாயில்லை; ராஜதர்மமாகிய வரம்பை அடியோடழித்தாய். நிராயுதனாயிருக்கின்றவன் மார்பில் அம்பெய்யவே விற்றொழில் கற்றாய்; இப்படிக் கொடிய செயலுடைய உனக்குத் தபசிகட்குரிய வேஷமும் வேண்டுமோ? இதுநிற்க, உனக்கும், எனக்கும் காணித்தாயமும், பூமித்தாயமும், வீட்டுவழக்கும், வழிப்பகை, ஜ்ஞாதிப்பகை, குடிப்பகைகளும், ஊர்ச்சண்டை பெண்பிணக்கு மண்பிணக்குகளும் இல்லை; என்று பல்லை நெறுநெறுவென்று கடித்துக் கண்களில் தீப்பொறி பறக்கக் கோபத்துடன் கூறினான்.

அதுகேட்ட இராமபிரான் வாலியை நோக்கி நீ இப்பொழுது வாய்க்குவந்தபடியெல்லாம் பிதற்றுகின்றாய்; நீ செய்த கார்யத்தைச் சிறிதும் ஆராய்ந்து பார்க்கின்றாயில்லை. நீ மாயாவி என்ற அசுரனோடு போர்செய்வதற்கு ஓர் பிலத்திற்புகுந்து அவனோடு போர் செய்துகொண்டிருந்தகாலத்தில் நீ நெடுநாளாய் வரவில்லை என்றறிந்த சுக்ரீவன் 'என் தமையன் கெதியாதாயிற்றோ' என்று கவலைகொண்டு அந்தப் பிலத்தில் நுழையத்தொடங்கினான். அப்பொழுது அறிவிற்சிறந்த சிலர் 'நீ எங்கட்கு அரசனாயிருக்கக் கடவாய் இங்

தப் பிலத்தில் நுழையவேண்டா' என்று தடுத்தார்கள் சுக்ரீவன் அவர்களை நோக்கி

"வானமாளவென்றம்முனைவைத்தவன்
தானுமாளக்கிளையினிறத்தடிந்
தியானுமாள்வெனிருந்தரசாள்கிலென்
ஊனமானவுரைபகர்ந்தீரென"

என் தமையனை ஸ்வர்க்கம்புகச் செய்தவனையும், அவனுடைய உற வினர்களையுங் கொன்று யானும் உயிர்துறக்கக் கடவேன். என் தமையன் உயிர்விட்டபின் நான் பிழைத்திருந்து அரசாளமாட் டேன். நீங்களெனக்குத் தகாத வார்த்தைகளைச் சொன்னீர்களென் ருன். அதன்பின்பு படைவீரரும், அறிவுடைய மந்திரிமார்களும், உறவினரும் வந்து பரிவுடன் நின்று 'நீயே அரசாளவேண்டும்' என்று வேண்டிக்கொண்டதினுல் அந்த அரசுரிமையை மேற்கொண் டான். அதன்பின் நீ மாயாவியைக் கொன்றுவிட்டு வந்தாய். அது சமயம் சுக்ரீவன் உன்மீது மிகவும் அன்புகொண்டு அண்ணு! என்று வணங்கி நின்று, 'உம்முடைய கூட்டத்தார்களின் நிர்ப்பந்தத்தால் இந்த அரசுரிமையைக் கைக்கொண்டேன். இனி நீரே கைக்கொள் ளக் கடவீ'ரென்று வஞ்சனையும், அஹங்காரமுமில்லாதவனுய் முன் னிகழ்ந்த விஷயங்களைச் சொன்னுன். அவற்றை ஒன்றுஞ் செவி யேற்றுக் கொள்ளாமல் சுக்ரீவனைக் கொல்வதற்கு முயன்ருய் சுக் ரீவன் 'அண்ணு உமக்கபயம் என் பிழையெல்லாம் பொறுத்தருளும்' என்று வேண்டினுன் அந்த வேண்டுகோளையும் ஏற்றுக்கொள்ளாமல் அவனேடு போர்செய்தாய். சுக்ரீவன் அப்போருக் காற்ருதவனுய் 'யான் உமக்குத்தோற்றேன்' என்று வணங்கிக் கூப்பிய கையினனுய் நின்ருன். அப்பொழுதும் நீ அவன்மீ திரக்கங்கொள்ளாமல் அவனை ஒழிப்பதற்கே யத்தனஞ் செய்தாய். அவன் உன்னைவிட்டுத் தப்பி ஓடிவிடவேண்டுமென்று ஏழு சமுத்திரத்திற் கப்புறத்திலுள்ள பூமி யையுந் தாண்டி அண்டச்சுவரை யடைந்தான். அதன்மேலும் அவனைக் கொல்லவேண்டுமென்று வாயுவேகமாய் சிம்மம்போல் அவனிருப்பிடம் பாய்ந்துசென்று 'இப்படித் தம்பியை வருத்து கின்ருனே' என்று சொல்லுகிற பழிக்கும் அஞ்சாமல் உன் வலிய கைகளால் அவனை எடுத்துச் 'சின்னம்பின்னமாக்கிக் கொல்வேன்' என்று உபர எழும்பினுய். அப்பொழுது சுக்ரீவன் ஓர் நல்ல அதிருஷ்டத்தால் நீ சோர்ந்திருந்த சமயம் பார்த்துத் தப்பி ஓட

வெண்ணி நீ சாபத்தால் கிட்டுதற்கரிய மதங்கமஹருஷியிருக்கும் ருஷ்யமுக பர்வதத்தை யடைந்தான். நீ பெற்ற சாபத்தால் அவனிருக்குமிடஞ் செல்வதற்கஞ்சி அவனைக் கொல்லாது விட்டனையே யன்றிச் சரணமடைந்தவனைப் பாதுகாக்கவேண்டும் என்ற விசேஷ தர்மத்தைப் பற்றியாவது, வலியிழந்து முதுகுகாட்டி ஓடுகின்றவனைத் துரத்திக் கொல்லலாகாது என்ற ராஜதர்மத்தைப் பற்றியாவது, தம்பியிடத்தில் அன்பு செலுத்தவேண்டும் என்ற உரிமையைக் கொண்டாவது அவனை விட்டிலை.

"ஈரமாவதுமிற்பிறப்பாவதும்
வீரமாவதுங்கல்வியின்மெய்ந்நெறி
வாரமர்வதுமற்றொருவன்புணர்
தாரமாவதுதாங்குந்தருக்கரோ"

அன்பு, நற்குடிப்பிறப்பு, வீரம், கல்வி கற்றதனாலுண்டாகிய மெய்யுணர்வு என்ற இவற்றின் செயலெல்லாம் பிறன் மனைவியைக் காதலிக்காதிருக்கும் வலிமையுடையவனுக்கன்றோ நிலைபெறுவதாகும். நீ, 'வலியுடையோம்யாம்' என்று கருதி வீரச் செயலினின்றுந் தவறி எளியரை ஹிம்ஸிப்பதும், பிறன் மனைவியைக் கற்பழிப்பதுமாகிய இவையெல்லாம் நீதியான கார்யங்களென்று கருதினையோ? தர்மமும், இம்மை மறுமைப் பயன்களும் இன்னின்னவாமென்று ஆராய்ந்தாயில்லை' அவற்றை யறிவையாகில் அருமையான உன் தம்பியின் உயிர்க்காதலியாகிய மனைவியைக் கற்பழித்திருக்கமாட்டாய். இது நிற்க, உன் தம்பியாகிய சுக்ரீவன் எனக்குயிர்க்காதலனாகியபடியால் அவனுக்குத்துணையாய் நின்று உன்னுயிரைப் போக்கினேன். எனக்கு யாதொரு ஸம்பந்தமில்லாதவராயினும் 'எமக்கொரு கெதியில்லை' என்று தம்மெளிவரவுதோன்ற என்னைத் தஞ்சமாகப் பற்றி நிற்பார்களாகில் அவர்களின் விரோதியைப்போக்கி அவர்களை ரக்ஷிப்பதே எனது ஸங்கல்பமென்பதறியாயோ? 'நுங்கள் குலத்துதித்த கற்புடைய மாதர்களுக்குரிய விவாஹம்போல எங்களுக்குச் சிருஷ்டி கர்த்தாவாகிய பிர்ம்மா நியமஞ்செய்யாமல் நேர்ந்தபடியெல்லாம் புணரும்படி விதித்தானென்றும்,

"மணமுமில்லைமறைநெறிவந்தன
குணமுமில்லைக்குலமுதற்கொத்தன
வுணர்வுசென்றுழிச்செல்லுமொழுக்கலா
னணிமுநெய்யுமிணங்கியநேமியாய்"

மனம்போனவழியே நடக்கும் நடக்கையல்லாமல் எங்களுக்கு வேத மார்க்கப்படிவந்தவையான விவாஹக்ரமங்களும் இல்லை; வம்ச பரம்பரைக் கொத்தனவான குணங்களும் இல்லை' என்றும் நீ சொல்வது முறையாகமாட்டா. நீ சிறப்புடைய தேவாம்சமுடையவனுய்த் தோன்றி நிலைநின்ற தர்ம மார்க்கத்தையும் அறிந்திருக்கின்றுய் ஆதலால் நீ ஸாமாந்யமான மிருகஜாதியில்லை; என்பது விளங்கியது. அப்படியிருக்கிற உனக்கு அதர்மமான செயல்கள் அடாதன அன்றோ!

"பொறியின்யாக்கையதோபுலனேக்கிய
அறிவின்மேலதன்றோவறத்தாறுதா
னெறியினேன்மையைநேர்நின்றுணர்ந்தநீ
பெறுதியோபிழையுற்றுறுபெற்றிதான்"

தர்ம மார்க்கந்தான் ஐம்பொறிகட்கு இடமாகிய உடம்பைப் பற்றியதோ? விஷயங்களையாராய்ந்து அறிகின்ற அறிவைப்பற்றியதன்றோ! அந்தத் தர்ம மார்க்கத்தின் பெருமையை நன்றாக அறிந்து நின்ற நீ தவறுகளை மிகுதியாகப் பெறுந்தன்மையைப் பெறக் கடவையோ? இது நிற்க, முதலையின் வாயிலகப்பட்ட கஜேந்திரனென்ற யானையானது முடிவில்,

"நாராயணவோமணிவண்ணநாகணையாய்
வாராயென்னுரிடரைத்தீராய்..."

என்று ஸர்வேசுவரனையழைத்த பெருமையுடைய அறிவின்பயனால் மோக்ஷமடைந்ததன்றோ! அதுவும் ஓர் விலங்கென்பதறியாயோ?

"சிந்தைநல்லறத்தின்வழிச்சேர்தலாற்
பைந்தொடித்திருவின்பரிவாற்றுவான்
வெந்தொழிற்றிறல்வீடுபெற்றெய்திய
எந்தையுமெருவைக்கரசல்லனே"

நல்ல தர்ம மார்க்கத்தில் மனஞ் சென்றதனால் சீதையினுடைய துன்பத்தைத் தீர்த்தற் பொருட்டுக் கொடியபோர்த்தொழிலில் தனது திறமையைக்காட்டி மோக்ஷமடைந்த என் பெரியதந்தையான ஜடாயுவும் கழுகுக்கரசனல்லவா! இதனால் விலங்குகளுக்கும் தேவருக்கொப்பாம் நல்லறிவுண்டாயிருந்த தென்பதும், அவைகளுக்கு நல்லறிவுண்டாவதில்லை யென்பதில்லை என்பதும் விளங்குகின்றனவே. இது நிற்க, நன்மை தீமைகளின் இயல்புகளை உள்ளபடி

அறியாதிருப்பதன்றோ மிருகங்கட்கு மனிதரோடுள்ள வேறுபாடு. நீ அறியாத தர்மங்கள் உலகிலுண்டோ? எல்லாத் தர்மங்களும் உன்னால் அறியப்பட்டனவன்றோ! இங்ஙனம் நீ அறிந்தாய் என்பது என்னோடெதிர்த்து நின்று 'நீ ஸத்ய நிஷ்டனாகிய தசரதனுக்குப் புதல்வனானவையோ? உத்தமனாகிய பரதனுக்குத் தமையனானவையோ? மனைவியை வீட்டுப் பிரிந்ததால் மதிகெட்டனையோ? வீரமுடையோன் ஓரஞ்செய்யலாமோ? மறுவற்ற சூரியகுலத்திற்குத் திருவற்ற கொடும்பழியை விளைத்தாய்; ஒருவன் பழி செய்ததற்கு மற்றொருவனை வதைப்பதும் மதிகேடன்றோ! அன்பும், இரக்கமுமில்லையாதலால் உயிர்ப்பசையற்றனை.; உன் வீரச்செயல் முதலியவையெல்லாம், பிறரால் இகழப்பட்டனவாய் ஒழிந்தனவே; அந்தோ! உன் தபவேஷத்திற்குத் தக்கசெயல் உன்பாலில்லையே; என்று வாதாடுகிற உன் வாய்மொழிகளே தெளிவாக அறிவிக்கிறதல்லவா! யான் ஓரம்பு எய்ததற்கு என் மீது சொல்லம்பு பல தொடுத்தனையே. அச் சொற்களும், வெளிப்படை, குறிப்பு, அணி, சொன்னயம், பொருணயமுடையனவாக வன்றோ காணப்படுகின்றன. உனக்கு வானர ஜாதிகளுக்குரிய தன்மையிருக்குமாகில் இப்படியெல்லாம் பேசுந்திறமுண்டாகுமோ? இதனை நீயே ஆராய்வாய்.

*"தக்கவின்னதகாதனவின்னவென்
றொக்கவுன்னலராயினுயர்ந்துள
மக்களும்விலங்கேமனுவின்னெறி
புக்கவேலவ்விலங்கும்புத்தேளிரே"

---

*"மாவுமாக்களும்ஐயறிவினவே
பிறவுமுளவேலக்கிளைப்பிறப்பே"

மிருகங்களும், அவையேல்வனவான மனவுணர்ச்சியில்லாத மனிதர்களும் ஐந்து அறிவுடைய வஸ்துக்களாம்; என்றதனால் மனிதனாய்ப்பிறந்து வைத்தும் மிருகங்களோ டெண்ணப்படுவானு முண்டு.

"மக்கடானேஆறறிவுயிரே
பிறவுமுளவேலக்கிளைப்பிறப்பே"

ஆறறிவுடையவரே மனிதராவாரென்றும்,பிறமிருகங்களுள்ளும் ஆறறிவென்ற மனவுணர் விருக்குமாகில் அவையும் மனிதரோடு சேர்த்தெண்ணப்படுந் தகுதியுடையன வென்றுமுரைத்ததனல் மிருகங்களுள்ளும் பகுத்தறிவுடையனவுண்டு.

தகுதியானவை இவை தகுதியல்லாதவை இவை என்று நீதிநூல் முறைமைக்குப்பொருந்த ஆராயாதிருப்பாராகில் எல்லாப் பிராணிகளைக் காட்டிலும் சிறந்துள்ள மனிதர்களானாலும் மிருகத்திற்கு ஒப்பானவர்களாவார். மிருகமானாலும் மனுதர்ம சாத்திர முறைமையிற் பொருந்தி நடந்தனவாயின் தேவர்கட்கு ஒப்பானவையேயாம்.

"காலனாற்றல்கடிந்தகணிச்சியான்
பாலினாற்றியபத்திபயத்தலான்
மாலினாற்றருவன்பெரும்பூதங்கள்
நாலினாற்றலுமாற்றுழிநண்ணினாய்"

யமனுடைய வல்லமையை யழித்து அவனையும்வென்ற மழுவென்னும் ஆயுதத்தையுடையவனான சிவபிரான்பக்கல் நீ செய்த பக்தி, பிரயோஜனத்தைத் தந்ததனால் திருமாலாகிய ஸ்ரீமந்நாராயணனால் படைக்கப்பட்ட வலிய பெரிய பூதங்கள் நான்கிற்கு உள்ள வலிமைகளை யெல்லாம் பெற்றாய். இப்படி அரிய பெரிய தபசைச்செய்து அறிவிற்சிறந்தவனாகிய நீ சரணாகதனான உன் தம்பி உனக்குப் பயந்து அவன் ஓடி யொளித்தவிடமெல்லாம் புகுந்து புகுந்துதைத் தடித்துக் கதறும்படி செய்த கொடுஞ்செயலும், அவன் மனைவியைக் கற்பழித்ததும் பெரும்பிழை யாகுமன்றோ! இத்தகைய கொடும்பாபியாகிய நீ உன்னறிவு கேட்டால் என்னைப் பலவாறாகப் பழி கூறினாய் உனக்கு அஹங்காரம் மேலிட்டபடியால் வைதிக மர்யாதையும், லௌகிகமர்யாதையும் அறிந்தாயில்லை. "இக்ஷ்வாகூணா மியம்பூமிஸ் ஸசைலவநகாநநா" மலைவனங்களோடுகூடிய பூமிப்பரப்பெல்லாம் எங்களுடையதாயிருக்க காணித்தாயம் பூமித்தாயமில்லை என்று நீ சொல்வது முறையன்றே. யான் உன் தம்பியாகிய சுக்ரீவனோடு உயிர் நண்பனாயிசைந்த நாள்தொட்டு அவனுக்குரிய சுகதுக்கங்களெல்லாம் என்னதாகப் பாவித்துக் கொண்டிருக்கிறேன். அவன் உன் காலில்விழுந்து கதறியகாலத்திலும் நீ அவனை அங்கீகரியாதொழிந்ததோடு "வஸ்த்ரேணைகேந வாநர:, ததாவித்ராவபாமாஸாவாலீ..." என்றபடி அவன் ஒற்றைவஸ்திரத்தோடு ஓடும்படி அடித்துத் துரத்தினையல்லவா? இவ்வாறு செய்த நீ ஜ்ஞாதிப்பகையில்லை யென்பதும் தகாது. இந்த கிஷ்கிந்தையும் நீயே கைப்பற்றிக்கொண்டு சுக்ரீவன் மனைவியையும் காதலித்தையாதலால் மண்பிணக்கும்; பெண்பிணக்கும் இல்லை என்று நீ சொல்வதும் பொருந்தாது.

''தாம் பாலயதி தர்மாத்மா பரதஸ் ஸத்ய வாக்ருஜு:
தஸ்யதர்ம க்ருதாதேசாத் வயமந்யேச பார்த்திவா:''
''சராமோ வஸுதாம் க்ருத்ஸாம்...''

என்றபடி தர்மாத்மாவாகிய பரதனுடைய ஆஞ்ஞையை நாங்களும், மற்றதேசத்து அரசர்களும் மேற்கொண்டு இந்தப் பூமியெல்லாம் சுற்றிக்கொண்டு திரிகிறோம். நீ துஷ்டகார்யத்தைச் செய்வையாகில் யாங்கள் உன்னைத் தண்டிக்காது விடுவதெப்படி?

''வத்யந்தி விமுகாம்ச்சாபி நசதோஷோத்ர வித்யதே
அயுத்யந் ப்ரதியுத்யந்வா யஸ்மாச் சாகாம்ருகோஹ்யஸி''

என்றபடி வானரமானது போர்செய்தாலும், போர் செய்யாதொழிந்தாலும், பராமுகங்கொண்டிருந்தாலும் அதைக் கொன்றால் தோஷமில்லையே. மிருகம் பக்ஷி முதலிய எந்த ஜாதியானாலும் துஷ்டர்களைத் தண்டிப்பது ராஜாக்களுக்குரிய கடமையன்றோ.

''வாகுராபிச்ச பாசைச்ச கூடைச்ச விவிதைர்நரா:
ப்ரதிச்சந்நாச்ச த்ருச்யாச்ச நிக்நந்திஸ்ம பஹூந்ம்ருகாந்''

ராஜர்க்கள், ரோமம் அஸ்தி மாம்ஸாதிகளாகிற ப்ரயோஜனமில்லாதொழிந்தாலும், ஜனங்களின் நன்மைக்காக வேட்டையாடுவதுண்டு. வேட்டையாடுகையில் மிருகங்களை, வலை கட்டிவளைத்தும், கண்ணிகட்டியும், ஊட்டிமுறித்தும், பார்வைவைத்தும், ஒளித்து நின்றும் பிடிப்பது வழக்கன்றோ!

''ஔரஸீம் பகிநீம் வாபி பார்யாஞ்சாப் யநுஜஸ்யப:
ப்ரசரேத் வாநர:காமாத் தஸ்யதண்டோவதஸ்ம்ருத:''

என்றபடி மனுஷ்யனானாலும், வானரமானாலும் தன் பெண்ணையும், தங்கையையும், தம்பியின் மனைவியையும் விரும்புவானாகில் அவனை வதஞ்செய்ய வேண்டுமென்பது ஆன்றோர் வழக்கன்றோ! என்று கூறினார்.

இப்படிப் பலவாறாக ராமபிரான் சமாதானஞ் சொன்ன விடத்திலும் ஒளித்து நின்று அம்பெய்தது மாத்திரம் குற்றமாம் என்ற புத்தியானது அவன் நெஞ்சை விட்டகலாதிருக்க மறுபடியும் ராமபிரானைநோக்கி,

"அவ்வுரையமையக்கேட்டவரிகுலத்தரசுமாண்ட
செவ்வியோயனையதாகச்செருக்களத்துருத்தெய்யாதே
வெவ்வியபுளிஞரென்னவிலங்கியேமறைந்துவில்லால்
எவ்வியதென்னையென்றான் இலக்குவனியம்பலுற்றான்"

எல்லோரையுமாளுகின்ற சிறப்புடையவனே! போர்க்களத்தில் முன் நின்று என் மேலம்பு தொடுக்காமல் கொடிய வேடர்கள் மறைந்து நின்று மிருகங்களின்மேல் அம்பு தொடுப்பதுபோல எதிர்ப்படாமல் விலகி மறைந்து நின்று வில்லைக்கொண்டு என்மேல் அம்புசெலுத்தியது யாதுகாரணமென்று கேட்டான். அதற்கு இளையபெருமாள் (லக்ஷ்மணன்) பதில் சொல்லத்தொடங்கினர்.

"முன்புநின் றம்பிவந்துசரண்புகமுறையிலோயைத்
தென்புலத்துய்ப்பனென்றுசெப்பினன்செருவினீயும்
அன்பினையுயிருக்காகியடைக்கலமியானுமென்றி
யென்பதுகருதியண்ணன்மறைந்துநின்றெய்ததென்றான்"

உன் தம்பியாகிய சுக்ரீவன் முதலில்வந்து சரணமடைய அப்பொழுது ராமபிரான் நீதியில்லாதவனான உன்னைக் கொல்வதாக வாக்குத்தத்தஞ் செய்தருளினர்; பின்பு நீயும் போரில் உனது உயிரிடத்தன்புடையையாய் 'யானும் உனக்கு அடைக்கலம்' என்று சொல்வாய் என்பதைக் கருதி எனது தமையனான ராமபிரான் மறைந்து நின்று அம்பெய்தார் என்று கூறினர். அதுகேட்ட வாலி ராமபிரான் தர்மத்தை நிலைநாட்டவந்தவனாதலால் தர்ம மார்க்க மழியும்படியான கார்யஞ்செய்யமாட்டான். 'நாம் அவனுடைய உண்மையான நிலைமையை அறியாமையால் வீணான பழிகூறினோம்' என்று மனம் வருத்தமுற்று ராமபிரானை நோக்கி, தாய்போல உயிர்கள் பக்கல் அன்புசெய்து, தர்மமும் நடுவு நிலைமையும் நற்குண நிறைவும் நீயே என்று சொல்லும்படிநின்ற புருஷோத்தமனே! வேத சாஸ்திரங்களிற்கூறிய ஸந்மார்க்கப்படி பார்க்கும் நேர்வழியால், நாய்போல எளியராய் நின்ற எங்கள் பக்கல் குற்றங்களில்லாமற் பார்க்கமுடியுமோ? என்னுடைய தீய செயல்களைப் பொறுத்தருள்வாய்,

"இரந்தனன்பின்னுமெந்தையாவதுமெண்ணல்தேற்று
குரங்கெனக்கருதிநாயேன்கூறியமனத்துக்கொள்ளேல்
அரந்தைவெம்பிறவிநோய்க்கருமருந்தனையவையா
வரந்தருவள்ளாலொன்றுகேளெனமறுத்துஞ்சொல்வான்"

எமது தலைவனே! எதையு மாராய்ந்தறியமாட்டாத குரங்கென்று என்னைத் திருவுள்ளம்பற்றி நாய்போற் கடைப்பட்டவனான எளியேன், உன்னைக்குறித்து நிந்தனையாகச் சொன்ன சொற்களை மனத்திற் கொள்ளாதே; வருத்தத்தைச் செய்கின்ற கொடிய எனது பிறப்பாகிய வியாதிக்கு அருமையான ஔஷதம்போன்ற ஸ்வாமி! விரும்பியவருக்குவேண்டிய வரங்களையெல்லாம் வரையாது கொடுக்கின்ற வள்ளலே! யான் சொல்வதொன்றைக் கேட்டருள்வாய்; என்று மீளவும் சொல்லத் தொடங்கினான்.

"ஏவுகூர்வாளியாலெய்துநாயடியனேன்
ஆவிபோம்வேலைவாயறிவுதந்தருளினாய்
மூவர்நீமுதல்வனீமுற்றுநீமற்றுநீ
பாவநீதருமநீபகையுநீயுறவுநீ"

கூரிய அம்பினால் என்னை அடித்து நாய்போற் கடையனான அடியேன் உயிர்நீங்கும் சமயத்தில் தத்வஜ்ஞானத்தை எனக்குக் கொடுத்தருளினாய்; எல்லாசராசரங்களுள்ளும் வெளியுமாய் நின்று விளங்குகிற பரப்ரஹ்மமே நீயாவாய்.

"புரமெலாமெரிசெய்தோன்முதலினோர்பொருவிலா
வரமெலாமுருவியென்வசையிலாவலிமைசால்
உரமெலாமுருவியென்னுயிரெலாநுகருநின்
சரமலாற்பிறிதுவேறுளதரோதருமமே"

திரிபுரங்களையும் எரித்தவனாகிய சிவபிரான் முதலிய தேவர்கள் எனக்குத்தந்தருளிய ஒப்பில்லாத வரங்களெல்லாவற்றையும் இடையே புகுந்து பழுதுபடச்செய்தும், எனது குற்றமில்லா வலிமை மிகுந்த மார்பு முழுவதையும் நுழைந்து துளைத்தும்; என்னுயிர் முழுவதையுமுட்கொண்ட உனது அம்பே யல்லாமல் தனியே வேறாயுள்ள தருமமென்பதொன்று இருக்கின்றதோ? சிவபிரான் தன்னைக்குறித்து வாழ்த்துகின்றவர்க்கு உயர்ந்தவரத்தை ஒழிவில்லாமற் கொடுத்தல், உனது ஒப்பற்ற 'ராம' என்ற திருநாமம் ஒன்றைக்கூறும் பேரன்பையுடைமையினாகும்; என்றால் அந்தப் பெயர்க்குரிய பொருளாகிய உன்னை ப்ரத்யக்ஷமாகத் தரிசித்த எனக்கு அரியதொன்று யாதுளது? எனக்கு அறிவென்ற ஆசாரியன், 'நீயே பூவும் அதனிடத்துள்ள வாசனையும்போல எல்லாப் பொருள்களிலும் விட்டு நீங்காமற் கலந்திருக்கின்ற ஒப்பற்ற பரம்

பொருளாவாய்' என்று உபதேசித்தான். ஆதலால் இனி அந்தமில் பேரின்பமாகிய பரமபதம் எனக்குக் கிடைப்பது அரிதோ?

"மற்றினியுதவியுண்டோவானினுமுயர்ந்தமானக்
கொற்றவநின்னையென்னைக்கொல்லியகொணர்ந்துதொல்லைச்
சிற்றினக்குரங்கினோடுநெரிவுறச்செய்தசெய்கை
வெற்றரசெய்தியெம்பிவீட்டரசெனக்குவிட்டான்"

வானத்தைக்காட்டிலும் பெருமையுற்ற வெற்றியை யுடையவனே! என் தம்பியாகிய சுக்ரீவன், என்னைக் கொல்லுதற்பொருட்டு நின்னை அழைத்துக் கொண்டுவந்து நெடுநாளாகச் சிறிய இனமாகிய குரங்குகளுடனே ஆலோசனையமையச்செய்த செய்கைகளையுடைய வீணன எனது அரசாட்சியை அடைந்து மோக்ஷ லோகத்தில் சிறப்புத்தோன்ற இருக்குந் தன்மையை எனக்குக் கொடுத்தான். ஆதலால் இதனைக்காட்டிலும் மேலாக எனக்கு அவன் செய்யக் கூடிய வேறு உபகாரமுண்டோ? என்று கூறினன். ராமபிரான் தன்னைநோக்கி 'நீ உன் தம்பி விஷயத்தில் மிகவும் பிழைசெய்தாய்' என்றுரைத்த சொல் பசுமரத்தறைந்த ஆணிபோல் நெஞ்சிற் பதிந்து 'அந்தோ! அவன் விஷயத்தில் என்ன காரியஞ் செய்தோம்' என்று அநுதாபங்கொண்டு ராமபிரானைநோக்கிக் கூறுகிறான்.

"ஓவியவுருவநாயேனுளதொன்றுபெறுவதுன்பாற்
பூவியனறவமாந்திப்புந்திவேறுற்றபோது
தீவினையியற்றுமேனுமெம்பிமேற்சீறியென்மேல்
ஏவியபகழியென்னுங்கூற்றினையேவலென்றான்"

சித்திரத்தில் எழுதியவடிவம்போல் அழகிய வடிவத்தையுடையவனே! எளியேன் உன் பக்கல்வேண்டிப் பெறுவதொரு வரம் இருக்கின்றது. அது என்னென்றால், என் தம்பியாகிய சுக்ரீவன் மலர்களிலுண்டான மதுவைக்குடித்து அறிவுமாறுபட்டபொழுது கெட்ட காரியஞ் செய்வானாயினும், அவன்மேற் கோபங்கொண்டு என்மேல் இப்பொழுது செலுத்திய அம்பாகிய யமனைச் செலுத்தாதிருப்பாயாக. இது நிற்க, என் தம்பியாகிய சுக்ரீவனை உன் தம்பிமார்கள் 'இவன் தன் தமையனைக் கொல்வித்த மஹா பாபி' என்று பழிப்பார்களாகில் அப்பொழுது அவர்களை நீ தடுத்தருள்வாய்.

"மற்றிலெனெனினுமாயவரக்கனைவாலிற்பற்றிக்
கொற்றவநின்கட்டந்துகுரக்கியற்றொழிலுங்காட்டப்
பெற்றிலென்கடந்தசொல்லிற்பயனிலைப்பிறிதொன்றேனும்
உற்றதுசெய்கென்றாலுமுரியனிவ்வனுமனென்றான்"

வெற்றியையுடையவனே! உனக்கு வேறொரு பேருதவி செய்ய வல்லேனாயினும் வஞ்சனையுடைய ராக்ஷஸனான ராவணனை வாலினால் சுற்றியெடுத்து உன்னிடத்திற் கொணர்ந்து ஒப்பித்து ஒரு குரங்காகிய எனக்கு இயன்றதாயிருக்கிற தொழிலையாயினும் செய்துகாட்டப் பாக்யம் பெறாதவனாகிவிட்டேன். இனிக் கடந்து போன செய்திகளைச் சொல்லுதலாற் பயனில்லை. ஆகவேண்டிய தான இச் செயலைச் செய்வாயாக என்று சொன்னாலும், வேறொரு செயலைச்செய்க என்றாலும் அதனைச்செய்து முடித்தற்கு இந்த ஹநுமான் உரியவன்.

"அனுமனென்பனையாழியையநின்செய்யசெங்கைத்
தனுவெனநினைதிமற்றென்றம்பிநின்றம்பியாக
நினைதியோர்துணைவரின்றோரனையவரிலைநீயீண்டவ்
வனிதையைநாடிக்கோடிவானினுமுயர்ந்ததோளாய்"

சக்ராயுதத்தையுடையவனே! இந்த ஹநுமானை உனது செவ்விய கையிலேந்திய வில்லைப்போல நினைப்பாய்; எனது தம்பியான சுக்ரீவனை உன் தம்பியான லக்ஷ்மணனைப்போல நினைப்பாய்; இவர்கள் போன்றவர்களான துணையாயுதவுபவர் வேறில்லை. நீ இப்பொழுது சீதாபிராட்டியை இவர்களைக்கொண்டு தேடிப்பெறுவாய். என்று சொல்லி அருகிலிருந்ததனது தம்பியாகிய சுக்ரீவனை வலியபெரிய தனது இரண்டு கைகளையும் நீட்டிச் சேர்த்து அணைத்துக்கொண்டு அப்பா! இப்பொழுது நான் உனக்குச் சொல்வதான நன்மை யொன்றிருக்கின்றது. அதனைக் கேட்டறிந்து மனத்திற்கொண்டு அநுஷ்டிப்பாய்.

"மறைகளுமுனிவர்யாருமலர்மிசையயனுமற்றைத்
துறைகளின்முடிவுஞ்சொல்லுந்துணிபொருடுணிவிற்றூக்கி
யறைகழலிராமனாகியறநெறிநிறுத்தவந்த
திறையொருசங்கையின்றியெண்ணுதியெண்ணமிக்கோய்"

வேதங்களும், மற்ற சாஸ்திரங்களின் முடிவும், எல்லா முனிவர் களும், மலர்மிசை வாழ்கிற பிர்ம்ம தேவனும் சொல்லுகிற தேர்ந்த பொருளாகிய பிர்ம்மந்தானே தர்மமார்க்கத்தை நிலை நிறுத்துதற் பொருட்டு ராமனாக அவதரித்து வில்லையேந்திக்கொண்டு வந்தது. இது விஷயத்தைச் சிறிதும் சந்தேகமில்லாமல் மனத்திற்கொள் வாய்.

"நிற்கின்றசெல்வம்வேண்டிநெறிநின்றபொருள்களெல்லாங்
கற்கின்றவிவன்றன்னாமங்கருதுவவிவனைக்கண்டாய்
பொற்குன்றமனையதோளாய்பொதுநின்றதலைமைநோக்கின்
எற்கொன்றவலியேசாலுமிதற்கொன்றமேதுவேண்டா"

அறிவில்லாத நிலைபேறுடைய மோக்ஷமாகிய செல்வத்தை விரும்பி நல்ல மார்க்கத்தில் நின்ற பொருள்களெல்லாம் இந்த ராமபிரான் திரு நாமத்தையே ஜபிக்கின்றன. இவனையே தியானிக்கின்றன. இதனை நீ அறிவாய். இவனிடத்திலுள்ள விசேஷங்களைப் பொதுமையாக நோக்கினால் என்னைக் கொன்ற வலிமையே சாக்ஷியாகும். இதைக் காட்டிலும் மேலான காரணம் வேண்டியதில்லை. அறியாமை மிகுந்த வாநரவிபற்கையையும், மயக்கத்தையு மாற்றி ராமபிரான் உனக்குச் செய்த உதவியை உள்ளத்திற்கொண்டு அவனுக்கேதேனும் இடையூ றுற்றவிடத்து உனது உயிரையுங்கொடுக்கக் கடவாய். அந்த ராம பிரான் கட்டளையிட்ட செயல்களை யெல்லாம் ஒழுங்காகச்செய்து எளிதிற் நீங்குதற்கரிய பிறவியினின்று நீங்கக்கடவாய். ராஜ்ய பாரத்தைப்பெற்ற மகிழ்ச்சியால் மனம்பூரித்து அறிவுகெட்டு ராம பிரானை இகழ்ச்சி செய்யாது அவன் திருவடியை விட்டு நீங்காமல் வாழ்வாய் என்று சுக்ரீவனுக்குப் புத்திகூறி ராமபிரானை நோக்கி 'இந்தச்சுக்ரீவன் இவன் உறவினரோடு உன்னடைக்கலப் பொருளா வான்' என்று சொல்லி தனது கைகளை சிரஸின்மேல் வைத்து அஞ் சலி செய்தான். அதன்பின் வாலி தன் புதல்வனான அங்கதனை நோக்கி,

"பாலமைதவிர்நீயென்சொற்பற்றுதியென்னிளைய
மேலொருபொருளுமில்லாமெய்ப்பொருள்வில்லுந்தாங்கிக்
கால்தரைதோயநின்றுகட்புலக்குற்றதம்மா
மால்தரும்பிறவிநோய்க்குமருந்தெனவணங்குமைந்த"

பிள்ளாய்! நீ என் விஷயமாய்த் துக்கப்படுகிற அறிபாமையை ஒழிப்பாய். நீ என் சொல்லைக் கடவாமல் கைக்கொள்வையானால், தன்னிலும் மேன்மையான ஒரு பொருளு மிருக்கப்பெறாத தத்வப் பொருளாகிய பரப்ருஹ்மந்தானே தன் கால்கள் நிலத்திற்படும்படி ஒரு மனித வடிவங்கொண்டு நின்று ஒரு வில்லைக் கையிற்கொண்டு நம் கண்ணிற்கு விஷயமாயிற்று. என்ன ஆச்சர்யம்! பயக்கத்தைத் தருகின்ற பிறப்பாகிய வியாதிக்கு மருந்தாகுமென்று வணங்குவாய் என்று வணங்கும்படிசெய்து அவனையும் இராமபிரானுக்கு அடைக்கலப்பொருளாக ஒப்பித்துத் தன் மார்பிற் செல்கின்ற பாணத்தை இழுத்துப் பிடித்திருந்த கைப்பிடி தளர்ந்தவுடன் விரைவையுடைய அந்த அம்பானது அவன் மார்பை ஊடுருவிச்சென்றது. வாலியும் பரமபதமடைந்தான்.

இவ்வளவு மாத்திரந்தான் வாலி ராமபிரானை நோக்கிக்கேட்ட கேள்விகளுக்கு ராமபிரான் பதிலுரைத்ததாக நூல்களிற் காணப்படுகிறது. வாலிக்கு ராமபிரான் சமாதானங் கூறுகிறகாலத்தில் இடையில் லக்ஷ்மணனும் வாலியை நோக்கிச் சமாதானங் கூறினர். இங்கு லக்ஷ்மணனால் கூறப்பட்ட சமாதான வாக்யங்களில் ராமபிரானுடைய பராக்ரமம் அருள் முதலிய பெருமைகள் நிறைந்து கிடக்கின்றன. இவற்றை இராமபிரான் தானே கூறுதல் சாலாதென்பதுவிளங்கும். ஒரு காலத்தில் மஹருஷிகள் ராமபிரானை நோக்கி 'நீயே ஸத்யபராக்ரமமுடைய பரப்ருஹ்மமாவாய்' என்று ஸ்தோத்திரஞ்செய்தபோது "ஆத்மாநம் மாநுஷம் மந்யே ராமம் தசரதாத்மஜம்" (நான் என்னைத் தசரதபுத்திரனை ஒரு மனுஷ்யனாகக் கருதுகிறேன்). என்று தன் பெருமையைத் தன் காதினால் கேட்பதற்கு விருப்பற்ற அவ்வளவு உத்தமனென்பதறியலாம். இதனால்; இதைக்குறித்து ராமபிரான் தன் வாக்கினால் கூறாது விட்டவிஷயம் பலவுண்டென்று ராமபிரான் ஸ்வபாவங்கொண்டு கருதலாம். இது நிற்க,

உலகத்தவர் ராமபிரான் வாலியை மறைந்து நின்று அம்பெய்து கொன்றது அநீதியாம் என்பதற்கு மூலசாசனமாக.

"சிரம் ஸ்தாஸ்யதி சாகீர்த்தி: த்ரைலோக்யே சராசரே
ராமே வாலிவதாத்யத்வத் ஏவம்த்ரோணே நிபாதிதே"

(வாலியைக்கொன்றதனுல் எவ்வாறு ராமபிரானிடத்திலபழிகிலே பெற்றிருக்கிறதோ! அவ்வாறே துரோணருடைய வதத்தினுல் இந்த அபகீர்த்தியானது சராசரங்களோடுகூடின மூவுலகங்களிலும் ஸ்திரமாக இருக்கப்போகிறது.) என்ற வாக்யம் விளங்குகிறது. இது, "அச்வத்தாமா ஹத: குஞ்சர:" என்று தர்மபுத்திரர் கூறிய வாக்யத்தைக் கேட்டுத் துரோணுசார்யர் உயிர் நீத்தபின், அர்ச்சுனன் உக்ரமான கோபங்கொண்டு தர்மபுத்ரரை நோக்கிக் கூறியதாம். இவ்வாறு கூறியதனுல் வாலிவத விஷயமாக மேலெழுந்தவாறு பழிப்புடைமை புலப்படுகிறது. இதன் உண்மை மிகவும் நுட்பமாக ஊகித்து அறியத்தக்கதொன்றும். இதைக்குறித்து ராமபிரானும் வாலியைநோக்கி "ஸூக்ஷ்ம: பரம துர்ஜ்ஞேய: ஸதாம் தர்ம: ப்லவங்கம" பெரியோர்களுடைய பரமஸூக்ஷ்மமான தர்மமானது அறிதற்கரிதாயிருக்கும்; என்று கூறினுன். இங்கு, வாலி தன்னை வதைசெய்தது நியாமன்றெனக் கருதியபோது, 'இதுநியாயமாம்' என்றவிஷயம் அதிநுட்பமாய் அறியத்தக்கது; உனக்குத் தெரியாது என்று குறித்துணர்த்தியதாம். இதுபற்றியே மாதவீயத்தில்,

"சௌசாசமநாதிகம் ஸ்தூலோதர்ம:
த்ரௌபதீ விவாஹ வாலிவதாதி: ஸூக்ஷ்மோதர்ம:

என்று உரைக்கப்பட்டது. இங்கு அர்ச்சுனன் கோபாவேசத்தால், 'ராமன் வாலியை வதைத்தது பழியான கார்யமாம்' என்று திருஷ்டாந்தமாக எடுத்துக்காட்டியதும் கொள்ளத்தக்கதில்லை. அர்ச்சுனன் துரோணுசார்யரைக் கொன்றது நியாயமன்றெனத் தர்மபுத்ரரை நோக்கிப் பலவாறுகக்கூறி வந்தகாலத்தில், திருஷ்டத்யும்னன் அர்ச்சுனனை நோக்கி நீ ராஜதர்மம் சிறிதும் தெரியாதவனுய்; இங்ஙனம் கூறுகின்றுய். துரோணர் தமக்குரிய ப்ராஹ்மண்யத்தை இழந்து போர்செய்ய வந்தாராதலால் நாங்களும் எங்கட்குரிய நிலைமையைக்கடந்து அவரை வதைத்தோம். போர்க்களத்தில், தந்தையாயினும், தனயனுயினும், குருவாயினும், மற்றெவராயினும் எதிர்த்துப்போர் செய்வாராயின் அவர்களைச் சாம, தான, பேத, தண்டம் என்ற நான்கு வகையான உபாயங்களால் வெல்லவேண்டியது க்ஷத்திரியனுக்குரிய கடமையன்றே! என்று எடுத்துச் சொன்னுன். இவற்றைக் கேட்ட அர்ச்சுனன் மறுத்தொன்

னுஞ் சொல்லுதற்கு வாயெழாது வாளா நின்றான். இங்கு அர்ச்சுனன் 'நாம் அறியாமையாற்கூறினேம்' என்பதைப் புலப்படுத்த வாளாவிருந்தான் ஆகையால் அவன் கூறியவையெல்லாம் குற்றமாம் என்பதைத்தானே ஒப்புக்கொண்டானாயிற்று. இது நிற்கக் கோபத்தால் தன் நிலைமாறிக் கூறியவைகளை உண்மையாகக் கொள்ளலாகாது.

"காய்தலுவத்தலகற்றியொருபொருட்கண்
ஆய்தலறிவுடையார்கண்ணதே—காய்வதன்கண்
உற்றகுணந்தோன்றாதாகுமுவப்பதன்கண்
குற்றமுந்தோன்றாக்கெடும்"

என்றதனாலும் கோபித்துக் கூறியவை பிரமாணமாகமாட்டா என்பதறியலாம். *எவ்வளவு பெருஞ்சிறப்புடையவராலும் தமக்கு வெறுப்புத் தோன்றிய காலத்தில் நன்மையையும் தீமையாகக் கூறுவதுண்டு. இதனாலும், வெறுப்புற்றுக் கூறிய சொல்லைத் தத்வார்த்தமாகக் கொள்ளலாகாதென்பது தெளிவாகிறது.

---

*"ஆடகனைப்புதல்வனைக்கொண்டழிப்பித்தாயிலங்கைநகர்க்காசையன்று
வீடணனைப்பகையாக்கிக்கிளையுடனேவீழ்வித்தாய்வேலைசூழ்ந்த
நாடறியப்புகுந்தெமக்குநாயகமாங்கன்னனையுநரன்கையாலே
ஈடழியப்பொருவித்தாய்................................."

இது, கர்ணன் அர்ச்சுனன் தொடுத்த அம்பால் உயிர் நீத்தகாலத்தில் தர்மபுத்திரர் கண்ணபிரானைநோக்கி வெறுத்துக் கூறியதாம். தர்மபுத்திரர் எல்லாத் தர்மங்களையும் ஐயந்திரிபற உணர்ந்தவர். தீயவற்றை மனமொழி மெய்களால் ஒருபோதுஞ் செய்தறியாதவர்; அன்பு அருள் முதலிய குணங்கள் ஒருங்கமையப்பெற்றவர்; இத்தகையபெருமைவாய்ந்த இவரும் தமக்கு வெறுப்புத்தோன்றிய காலத்தில் தன் நிலைதடுமாறி உண்மையைமறந்து கண்ணபிரானைநோக்கி நீ முற்காலத்தில் பிரகலாதனைக்கொண்டு ஹிரண்யனையும், விபீஷணனைக் கொண்டு இராவணனையும் அர்ச்சுனனைக்கொண்டு என் தமையனாகிய கர்ணனையும் கொல்வித்தாய். தர்ம சாஸ்திரத்தில் தந்தையும் தமையனையும் தனயன் தம்பியர்கள் தெய்வமாகக் கொள்ளவேண்டுமென்று கூறப்பட்டுள்ளதே. அம்முறையை அடியோடொழித்து இங்ஙனஞ் செய்தனையே, ஈதென்ன மாயச்செயல்! என்று வெறுத்தார்.

உலகத்தில் நல்லவன், தீயவன் என்பதை அவனிடத்துள்ள குணம் செயல்களைக்கொண்டு ஆராயவேண்டும். இதுநிற்க, ஒருவனுக்கு முதலில் நற்குண நற்செயல்களுண்டாகி இடையில் அவை நழுவவும், தீக்குண தீச்செயல்களுண்டாகி இடையில் அவை நழுவவும், எப்பொழுதும் அவை ஒருபடிப் பட்டிருக்கவும் காண்கிறோம், ஆதலால் ஒருவனுடைய தன்மை இது என்று தீர்மானிப்பதற்கு அவனுடைய ஆதியோடந்தமான விருத்தாந்தங்களைத் தெரிந்துகொள்ளவேண்டியது இன்றியமையாததாகும். ஆக இங்கு வாலியினிடத்தில் எப்பொழுதாவது நற்குண நற்செயல்களிருந்தனவா? என்பனவற்றை ஆராய்வோம்.

வாலி சிவபிரானை நோக்கித் தபசுசெய்த காலத்தில் சிவபிரான் பிரஸந்நராய் உனக்கு வேண்டிய வரம் யாதெனக் கேட்டார். அப்பொழுது வாலி 'எவ்வளவு வரபலத்தால் சிறந்தவராயினும் அவர் என்னோடு எதிர்த்துப் போர்செய்வாராயின் அவருக்குள்ள வரமும் பலமும் எனக்குப் பாதி வந்துவிடவேண்டும்' என்று கேட்டான். சிவபிரானும் அவ்வாறே தந்தோமென்று வாக்களித்துச் சென்றார். வாலிக்கு நல்ல எண்ணம் இருந்திருக்குமாகில் எனக்கு மோக்ஷ ஸாதனமாகிய ஜ்ஞானபக்திகள் உண்டாகவேண்டும்; தன்னுயிர்போல் மன்னுயிரையும் எண்ணத்தக்க அருள்வேண்டும்; இனிப் பிறவாதிருக்கவேணடும்; முடிவில் நிரதிசயாநந்த வீடு அடையவேண்டும் என்ற வரங்களையன்றோ விரும்பிப் பெற்றிருப்பான். இவன் இவற்றையெல்லாம் ஒழித்து என்னை எதிர்த்தவன் வரபலம் பாதி என்னைச் சேரவேண்டுமென்று கேட்டதினால், தான் எதிரற்றவனாய் இருந்து எல்லோரையும் தன் கீழ்ப்படுத்தி எதிர்த்தோரை அடித்திடித்துக் கொன்று மனம் சென்றவாறெல்லாம் திரியலாமென்ற கெட்ட சிந்தை கொண்டவனெனத் தெரிகிறது. இதுநிற்க, வரபலத்தால் 'யானே பெரியேன்' என்று அஹங்கரித்திருந்த ஹிரண்யாதி அரக்கர்களின் இவன் தாழ்ந்தவனில்லை. தன்பலத்தால் தனக்கு நிகர் யாருமில்லையென்று மதித்திருந்தான். இக் கருத்துப்பற்றியே பெரியவாச்சான்பிள்ளை யும்வாலியென்று பெயராய், மஹா்பலத்தில் வந்தால் தன்னை எண்ணினால் இரண்டாம் விரலுக்கு ஆளில்லாதபடி அத்விதீயனாயிருக்கிறவன்' என்று அருளிச்செய்தார். இனி, வாலி தீயொழுக்கமுடையவனாய்ச் செருக்குற்றிருந்தானென்பது ஆராய்ந்துணரக்கப்படும்.

சுக்ரீவன் இராமபிரானை ஸகாயங்கொண்டு வலியப் போர்க் கழைத்த காலத்தில் வாலிக்குக் கோபமுண்டாகி 'சுக்ரீவனை இப் பொழுதே கூற்றுவனுக் கிரையாக்குவேன்,' என்று ஆரவாரத் தோடு புறப்பட்டான். அப்பொழுது உத்தமியாகிய தாரையென்ற அவன் மனைவி அவனை நோக்கி,

"கொற்றவநின்பெருங்குவவுத்தோள்வலிக்கு
இற்றையனல்லனுலிடெண்டேகுவான்
பெற்றிலன்பிறந்திலன்பெயர்த்தும்போர்செயற்
குற்றதுநெடுந்துணையுடைமையாலென்றாள்"

வெற்றியையுடைய தலைவனே! சுக்ரீவன் இத்தனைநாள் இருந்தவன் போன்றவனல்லன்; உனது பெரிய இரண்ட தோள்களின் வலி மைக்கு இத்தனைநாளாய் ஆற்றாது சென்றவனான அவன் இன்று புதிதாக ஒருடம்பு வலிமையைப் பெற்றானில்லை; அந்தப் பிறப்பை விட்டு புதிதாக வேறொரு பிறப்பெடுத்துத் தோன்றினானுமில்லை. இவ்வாறிருக்க அவன் மீளவும் உன்னுடன் போர்செய்வதற்கு வந்தது பெரிய துணைவனைப் பெற்றதா லாகுமென்றாள். அதுகேட்ட வாலி.

"ஆற்றினெனமரருமவுணர்யாவருந்
தோற்றனரெனையவர்சொல்லற்பாலதோ
கூற்றுமென்பெயர்சொலக்குலையுமாலினி
மாற்றவர்க்காகிவந்தெதிருமாண்பினர்"

"பேதையெதிர்குவரெனினும்பெற்றுடை
யூதியவரங்களுமுரமுமுள்ளதிற்
பாதியுமென்னதாற்பகைப்பதெங்ஙனம்
நீதுயரொழிகெனநின்றுகூறினன்"

பெண்ணே! வலிமையோடு போர் செய்தவனான எனது முன்னிலை யில் தேவர்களிலும், அசுரர்களிலும் எத்தனையோபேர் தோல்வி யடைந்தார்கள்; அவ்வாறு தோற்றவர்களது தொகை இவ்வள வென்று சொல்லத்தக்கதாமோ? எல்லார் உயிர்களையும் உடலினின் றும் பிரித்து வாங்குகின்றவனான யமனும் எவரேனும் என்பெயர் சொன்னவளவிலே நடுநடுங்குவான். இவ்வாறானபின்பு எனது பகைவனான சுக்ரீவனுக்குத் துணையாகிவந்து என்னோடு மாறுபடுந் தன்மையர் அறிவில்லாதவர்களேயாவர்; அவ்வாறு அவர்கள் எதிர்ப்பாரேயானாலும் அவர்கள்

பெற்றுள்ள லாபகரமான சிறந்த வரங்களும், பலமும் பாதி அவர்களை விட்டுப் பிரிந்து என்னதாய்விடும். ஆதலால் அவர்கள் என்னைப் பகைப்பது எப்படி? இனி நான் போர்க்குச் செல்வதைப்பற்றி நீ துன்பமடையா திருப்பாயாக, என்று சமாதானங் கூறினன்.

"அன்னதுகேட்டவளரசவாயவற்
கின்னுயிர்நட்பமைந்திராமனென்பவன்
உன்னுயிர்கோடலுக்குடன்வந்தானெனத்
துன்னியவன்பினர்சொல்லினரென்றாள்"

அதுகேட்ட தாரையானவள் தலைவனே! இராமனென்பவன் அந்தச் சுக்ரீவனுக்கு இனிய பிராண சிநேகிதனைப் பொருந்தி உன்னுயிரைக் கவர்தற்காக அவனுடன் வந்திருக்கிறான் என்று நமக்குரிய உயிர்த்துணைவராயிருக்கும் அன்பினர்கள் சொன்னார்கள் என்றாள். வாலி இது விஷயத்தையும் சிறிதுங் கவனிக்காமல் இவள் வாய்ப் பேச்சை எவ்வாறுவது அடக்கவேண்டுமென்று ஆலோசித்து.

"உழைத்தவல்லிருவினைக்கூறுகாண்கலா
தழைத்தயருலகினுக்கறத்தினறெலா
மிழைத்தவற்கியல்பலவியம்பியென்செய்தாய்
பிழைத்தனைபாவியுன்பெண்மையாலென்றான்"

பாவி! அனேக காலமாய் உழைத்துச் சேர்த்த வலிய நல்வினை தீவினையான இரு கர்மங்களுக்கு அழிவு காணுமல், வருத்தத்தால் அரற்றி வருந்துகின்ற உலகத்திலுள்ள உயிர்களுக்கு தர்மமார்க்கங்களை யெல்லாம் செய்து காட்டுபவனை இந்த இராமனுக்குத் தகுதியல்லாத வார்த்தைகளைச் சொல்லி அபசாரப்பட்டாய்; உனது பெண்தன்மைக்கு ஏற்ற பேதைமையால் இவ்வாறு தவறு செய்துவிட்டாய்; என்று சொன்னன். தாரையானவள் அதன்மேலும் பேசுதற்கு வாயெழாது பயந்து வாளாநின்றாள். இங்கு வாலி 'நம்மைக் கொல்லவல்லார்எவருமில்லை என்றஉட்கருத்துடையவனா யிருந்தானாதலால், தன்னுயிர்க் காதலியாகியதாரை இவன்மீது பரிவுகொண்டு "துன்னியவன்பினர்சொல்லினர்" என்று சொல்லிய நல்லுரை அவன் செவிக்கேறு தொழிந்தது. இது நிற்க,

"தேசியைச்சிறையில்வைத்தான்தேவரையிடுக்கண்செய்தான்
பூசுரர்க்கலக்கனீந்தான்மன்னுயிர்புடைத்துத்தின்றான்
ஆசையினளவுமெல்லர்வுலகமுந்தானேயாள்வான்
வாசவன்றிருவுங்கொண்டான்வழிபலாவழியிற்சென்றான்"

என்றபடி மஹா பாபங்களைச்செய்து தீயவழியிற் செல்பவனான இராவணனோடு தோழமை கொண்டான். அவன் செய்கிற தீய செயல்களிற் கண்வைக்காதிருந்தானாதலால் தீயசெய்கை செய்வதில் இவனுக்கு முடன்பாடென்பதும் விளங்கும். சுக்ரீவனை ஒற்றை வஸ்திரத்தோடு ஓடும்படி அடித்துத் துரத்தினனாதலால் இரக்கஞ் சிறிதுமில்லாதமரங்கள்போல் வலியநெஞ்சு படைத்தவனாயுமிருந்தான் இதனால், இவன் அஹங்காரத்தால் அகிருத்யங்களைச்செய்தே தன் வாழ்நாளைக் கழித்தானாதலால் இவனிடத்திற் சிறிதேனும் நல்லொழுக்கமில்லை யென்பதுதெளிவாகிறது. ஆகவே இவன் வதைக்குரியவனென்பதறியலாகும். இனி, இவனை ராமபிரான் வதை செய்ததும் நீதியாமென்பதாராயப்படும்.

ராம லக்ஷ்மணர்கள் கவந்தனது அவயங்களைத் தம் அம்புகளால் கொய்த காலத்தில் அவன்செயலற்றுக் கிடந்தான். அப்பொழுது அவன் ராமபிரானைநோக்கி நீர்என்சரீரத்தைஎரிக்குஇரையாக்குவீராகில் எனக்கு ஒரு திவ்ய ரூபமுண்டாகும்; அதன் பிறகு உமக்குச்சில நன்மைகளைச் சொல்லுகிறேனென்றான். அதன்படி ராமபிரான் அவன் சரீரத்தை ஜிதையில் (ஈமவிறகில்) வைத்து எரிமூட்டினார். அப்பொழுது கவந்தன் திவ்யரூபம்பெற்று நின்று ராமபிரானைநோக்கி நீர் வாலியென்ற மஹாபாபியோடு எவ்வகைக் காரணத்தாலுஞ் சேர்ந்து விடலாகாது. அவன் தம்பியாகிய சுக்ரீவனோடு அக்னிசாக்ஷியாகச் சிநேகஞ் செய்துகொள்வீர். அவன் இப்பொழுது வாலியால் துன்புறுத்தப்பட்டு மிகவுங் கஷ்ட நிலைமையிலிருக்கிறான். அவன் இஷ்டத்தைப் பூர்த்திசெய்து வைப்பீராகில், உமது கார்யமெல்லாம் இனிதாய்முடித்து வைப்பான். அவன் நினைத்த வடிவங்கொள்ளும் ஆற்றலுடையவன்; அவனுக்குத் தெரியாத தோரிடமில்லை. அவன்,

"வாநரேந்த்ரோ மஹாவீர்யஸ் தேஜோவா நமிதப்ரப:
ஸத்யஸந்தோ விநீதச்ச த்ருதிமாந் மதிமாந் மஹாந்"

என்றபடி வாநரசிரேஷ்டன்; மஹா வீர்யமுடையோன்; அடங்காப் புகழுடையோன்; ஸத்யநிஷ்டன்; தாழ்மையுடையவன்; தைரிய

மூடையவன்; நல்ல புத்தியுடையவன்; பெருமையுடையவன் என்று அவன் சிறப்பையெல்லாம எடுத்துரைத்தான். இப்பொழுது அவன் ரிசியமுக பர்வதத்திலிருக்கிறான். அப்பர்வத மிருக்குமிடத்தைத் தாய்போல் அன்பிற்சிறந்த சபரியிடத்திற்கேட்டுத் தெரிந்துகொள்வீர்; என்று சொன்னான்.

அதன்பின்பு ராமலக்ஷ்மணர்கள் கவந்தன்கூறிய குறிப்புக்களைக்கொண்டுபலவழியிடங்களைக்கடந்து மதங்காச்ரமம்வந்து இவர்களை நெடுநாளாக எதிர்பார்த்துக்கொண்டிருந்த சபரியைக் கண்டார்கள். சபரியு மிக அன்போடு விருந்தளிக்க அதை உவந்தேற்றுக்கொண்டு அருந்தவத் தாசியே! நீ செய்த உபசாரத்தால் நாங்கள் வழிவந்த வருத்தத்தினின்றும் நீங்கி மகிழ்வடைந்தோம் என்று கொண்டாடினார்கள். அப்பொழுது,

"அனகனுமிளையகோவுமன்றவணுறைந்தபின்றை
வினையறுநோன்பினாளுமெய்ம்மையினோக்கிவெய்ய
துனைபரித்தேரோன்மைந்தனிருந்தவத்துளக்கில்குன்றம்
நினைவரிதாயற்கொத்தநெறியெலாம்நினைந்துசொன்னாள்"

என்றபடி சபரி தன் மெய்யறிவால் ஆராய்ந்து சுக்ரீவ னிருக்குமிடத்தைச் சொல்லிவிட்டு முக்தியடைந்தாள். அதன்பின் ராமலக்ஷ்மணர் ரிசியமுக பர்வதம் வந்து ஹநுமானைச் சந்தித்தார்கள். ஹநுமானும் தன்னை இன்னானெனக் கூறிச் சுக்ரீவன் தன்மையையும் கவந்தன் கூறியபடி உரைத்தான். அதன்பின் உத்தமனான சுக்ரீவனைக் காண விருப்புற்று ஹநுமான் காட்டக்கண்டு சுக்ரீவனோடு அக்னி சாக்ஷியாகச் சிநேகஞ் செய்துகொண்டார்கள். ராமபிரான், கவந்தன் திவ்ய ரூபங்கொண்டு கூறிய சொல்லாலும், ஹநுமான் உரையாலும், சுக்ரீவனிருக்கும் நிலையாலும் வாலியை *ஆததாயி என்றும் சுக்ரீவனை மஹா பாகவதனென்றும் அறிந்துகொண்டார். ஆததாயியை "ஆததாயித மாயாந்தம் ஹந்யாதேவாவிசாரயந்" என்ற நியாயப்படி கேட்ட மாத்திரத்தால் விசாரிக்காமல் சிக்ஷிக்கலாம்.

---

*"கொடியவரென்றது தீக்கொழுவார்,நஞ்சிடுவார், கருவியிற்கொல்வார், கள்வர், ஆறலைப்பார் (வழிப்பறிப்பார்) சூறைகொள்வார், பிறனில்விழைவார் (மற்றவன் மனைவியை விரும்புவார்) முதலாயினோரை. இவரை வடநூலார் ஆததாயியென்ப"என்று பரிமேலழகர் உரைத்ததும் இங்கறியத்தக்கது.

"கொலையிற்கொடியாரைவேந்தொறுத்தல்பைங்கூழ்
களைகட்டதனொடுநேர்"

என்றபடி அவர்களைக் கொலைபுரிந்து நல்லோரைக் காப்பது, உழவினன் களைகளைந்து பயிரைப் பாதுகாப்பதுபோல அரசர்க்குரிய தர்மமாம். அந்த ஆததாயிகளைக் கொலைபுரிகிற காலத்தில் ராஜாக்கள் அவர்கள் முகத்தில் விழிக்கலாகாது. இவ் வநுஷ்டானம் இப்பொழுதும் ராஜாங்கத்திலிருக்கக் காண்கிறோம். ஆகையால், ராமபிரான் வாலி சுக்ரீவர்கட்கு மற்போர் நடந்துகொண்டிருந்த காலத்தில் "கோக்கோக்ககூம்பும்பருவத்துமற்றதன், குத்தொக்கசீர்த்தவிடத்து" என்றபடி இதுவே தக்க சமயமென்று மறைந்துநின்று வாலியைக் குறித்து அம்பெய்து கொன்றார். வீரனுயிருப்பவனுக்குப் போர்க்களத்தில் புறங்காட்டி ஓடுதலும், மறைந்து நின்று கொல்வதும், நிராயுதன்மேல் அம்பெய்வதும் கூடாவாம். இங்கு வாலியைக் கொன்றது சிக்ஷாஸ்தலமாதலால் அக் குற்றமொன்றுஞ் சாராது.

ராமபிரான் தன் விரோதியாகிய இராவணனைக் கொல்கின்றவிடத்தில் பலகால் தூது அனுப்பியும், "இன்று போய்ப் போர்க்கு நாளை வா" என அநுமதி செய்தும் தாமதஞ்செய்து கொன்றான். வாலியைக் கொல்கின்றவிடத்தில் தாமதிக்காது செய்தானாதலால், தன்னடியார்கட்கு விரோதியா யிருப்பவர்களின் பிழைகளை ஒருபோதும் பொறுப்பதில்லை யென்பதும், அவர்கட்கு நேர்ந்த விரோதிகளை அப்பொழுதே போக்கி அருள்செய்பவனென்பதும் தெளிவாகின்றன. ஸர்வேசுவரன் தன்னடியார்களைத் தன்னுயிராகக் கருதுமவனன்றோ! திருப்பாணாழ்வாரை லோகசாரங்கமாமுனிவர் தாழ்மையாகக்கருத, அது பொறாத ரங்கநாதன் லோகசார்ங்க மாமுனிவரை முனிந்து, திருப்பாணாழ்வாரை அப்பொழுதே யழைத்துக்கொண்டு வரும்படிசெய்து அருள் செய்தான் என்ற வரலாறும் இதனை வலியுறுத்தும்.

இன்னும், ராமபிரான் *பிருகுமஹருஷி கொடுத்த சாபத்தைக் காப்பாற்றுவதற்காகச் சீதாபிராட்டியை விட்டுப் பிரிந்திருந்தது

---

*பிருகுமஹருஷி கொடுத்த சாப வரலாறு முதல் தொகுதியின் 31-ம் பக்கத்திற் பார்க்க.

போலச் சிவபிரான் வாலிக்குக் கொடுத்த வரத்தைப் பரிபாலிப்பதற்காக வாலியை மறைந்துநின்று அம்பெய்து கொன்றானெனினும் விரோதமாகாது.

இனி, இராமபிரான் வாலியை மறைந்துநின்று அம்பெய்து கொன்றதற்கு எவ்வளவு சமாதானம் சொன்னாலும் பொருந்தாது; அது குற்றமேயாம், என்ற பக்ஷத்தை ஒப்புக்கொண்டு அதற்கும் சமாதானம் உரைக்கப்படும்.

அர்ச்சுனனும், துரியோதனனும் தங்கட்குப் படைத்துணையாக இருப்பதற்குக் கண்ணபிரானை யழைக்கச் சென்றனர். அப்பொழுது கண்ணபிரான் துரியோதனனை நோக்கி 'நான் முன்பே தர்மபுத்திரருக்குப் படைத்துணையாக வருகிறேனென்று வாக்களித்தேன்; இப்பொழுதும் துயிலினின்று எழுந்திருந்தகாலத்தில் அர்ச்சுனன் முகத்தில் முன்னதாக விழித்தேன். ஆதலால் அவர்கட்கேதான் நான் படைத்துணையாகச் செல்வே' னென்று அருளிச்செய்தான். அதன் பின்பு துரியோதனன் 'நாம் கருதிவந்த காரியம் கைகூடவில்லையே' என்று ஆலோசித்துக் கண்ணபிரானை நோக்கி, நீர் அவர்கட்குப் படைத்துணையாகச் செல்லினும் ஆயுதமெடாதிருக்கவேண்டும்' என்ற வரத்தைக்கேட்டான். கண்ணபிரானும் அவ்வாறே வரமளித்தார். இதுவிஷயங்கேட்ட பீஷ்மாசார்யர் 'போரில் ஆயுத மெடே னென்ற ஆபர் தலைவனாகிய கண்ணபிரானை யான் ஆயுதமெடுக்கும்படி செய்கிறே' னென்று சபதஞ் செய்தார். அதன்பின் பீஷ்மாசார்யர் துரியோதனனுடியர்பக்கல் சேர்ந்து பாண்டவர்களோடு குரூரமான போர்செய்த காலத்தில் கண்ணபிரான் தான் 'ஆயுதமெடேன்' என்று கொடுத்த வரத்தையும் பொருட்படுத்தாமல் சக்ராயுதத்தை எடுத்துக்கொண்டு போர்செய்யத் தொடங்கினான். இங்குக் கண்ணபிரான் தான் கொடுத்த வரத்தைப் பொருட்படுத்தாததற்குக் கருத்து யாதெனின்? தனக்குப் பழிவந்தாலும் தர்மஸூக்ஷ்மமெல்லாமறிந்து, தன்னையே பரதேவதையாக மதித்திருந்த தன்னடியாரான பீஷ்மாசார்யருக்கு ஒரு பழிச்சொல் வாராதிருப்பதற்காக அங்ஙனஞ் செய்தானென்க.

ஸத்யஸங்கல்பனான ஸர்வேசுவரன் தன் வாய்மொழியும், தன்னடியாரின் நிமித்தம் ஏதேனு மொருஸமயத்தில் பிழை படுதலுமுண்டு என்ற கருத்தால் கண்ணபிரான் கீதையில் அர்ச்சுனனை

நோக்கி "கௌந்தேய ப்ரதிஜாநீஹி நமேபக்த: ப்ரணச்யதி" என்னுடைய பக்தர்கட்கு ஒருபொழுதும் அழிவில்லையென்று நீயே ஸத்யஞ் செய்வாய் என்று அருளிச்செய்தான். இது நிற்க, இராவணன் வானர வெள்ளத்தின் தன்மையைப் பார்க்க அவாக்கொண்டு தன் மாளிகையின் மீதேறி நின்றுத் தன்னுரவாரந்தோற்றப் பார்த்தான். அதுகண்ட சுக்ரீவன் கோபங்கொண்டு பாய்ந்துசென்று இராவணன் மகுடபங்கஞ்செய்துவந்தான். அப்பொழுது ராமபிரான் சுக்ரீவனை நோக்கி 'நீ என்ன கார்யஞ்செய்தாய்' "த்வயிகிஞ்சித் ஸமாபந்நே கிம் கார்யம் சீதயாமம" என்று அருளிச்செய்தார். இதன் பொருளாவது:– (நீ சென்றவிடத்தில்) உனக்கு ஏதேனும் சிறிது அவமானம் ஏற்பட்டிருக்குமாகில் இனி நான் அடையப்போகிற சீதையினால்தான் எனக்கு என்ன ப்ரயோஜனமுண்டு என்பதாம். இராவணன் உன்னை நோக்கி ஏ! குரங்கே என்று இவ்வளவு மாத்திரம் பேசியிருப்பானாகில் அவ்வவமானத்தைப் பொறுக்கமாட்டேனென்பார்; 'த்வயிகிஞ்சித்ஸமாபந்நே' என்றார். இதனால், ஸர்வேசுவரன் தனக்கோர் பழியை ஏற்றுக்கொண்டாவது தன்னை யடைந்தவரின் சபதத்தைக் காப்பாற்றுபவனென்பதும், அவர்கட்குண்டாகும் அவமானத்தையும், துன்பத்தையும் சிறிதும் பொறுக்கமாட்டானென்பதும் விளங்குகின்றன. ஆதலால் இங்குச் சுக்ரீவனாகிய தன்னடியானை ரக்ஷிப்பதற்காக வாலியை மறைந்து நின்று கொன்று பழிச்சொல்லை ஏற்றுக்கொண்டானெனினும் பொருந்தும்.

இவை யெல்லாம் ஒருபுறமிருக்க இதற்கு மற்றோர் சிறந்த சமாதனமும் உண்டு. அதுவும் இங்குரைக்கலாகும். கொடுமையுடைய இராவணனாதி ராக்ஷஸர்களால் நலிவுற்ற தேவர்கள் சிவபெருமானையடைந்து ஸ்வாமி! 'எமது கஷ்டத்தைத் தீர்த்தருள்வீராக, என்று பிரார்த்தித்தார்கள். சிவபிரான் 'நாம் அரக்கர்களைக் கொல்வதெங்ஙனம்?' என்று தேவர்களை அழைத்துக்கொண்டு பிரம்மதேவன் இருப்பிடம் அடைந்து அரக்கர்களால் உண்டான துன்பங்களை அறிவித்தான். அப்பொழுது பிர்ம்மதேவனும், கொடியவனாகிய இராவணனோடு போர்செய்து அவனைக் கொல்லுந்திறம் நமக்கு மில்லை, திருப்பாற்கடலில் அறிதுயிலமர்கின்ற கருணையங்கடவுளே அந்த அரக்கர்களோடு போர்செய்து நமக்கருள் செய்தாலொழிய வேறுகெதி ஒன்றுமில்லையென்று, சென்று பாற்கடலிற் பள்ளி

கொள்ளும் பரமனைக் கைகுவித்துத் துதித்தார்கள். அத் துதிக்குத் திருவுள்ளமிரங்கிய அப்பரமன் கெருடவாகன ரூடனாய்த் தோன்றினான். அப்பொழுது பிர்ம்ம ருத்ரர்கள் அவனது பாதாரவிந்தங்களைப் பணிந்து நின்று களிப்புற்றார்கள், தேவர்களும், ஆடிப்பாடி அகங் களித்து இனி அரக்கர்கள் ஒழிந்தார்கள் என்று திருத்துழாய் மணக்கும் அவனது திருவடிகளை வணங்கினார்கள். அதன்பிறகு இராவணன் முதலாயினோர் செய்கிற கொடுந்தொழிலால் விண்ணிலுள்ளோர்களும், மண்ணிலுள்ளோர்களும், தங்களுடைய தவ ஒழுக்கங்களைச் செய்தற்கியலாதிருக்கின்றார்கள். இனி உய்யும் வகையில்லை நாங்கள் தந்த வரபலத்தால் அவர்கள் மூவுலகங்களிலுமுள்ளாரை எல்லாம் ஹிம்ஸிக்கிறார்கள். நீர் இனி அவர்களை அழிக்காதொழிந்தால் இவ்வுலகை ஒரு நொடிப்பொழுதில் உண்டுவிடுவார்கள்; என்று முறையிட்டார்கள். அப்பொழுது பரம கருணா நிதியான ஸர்வேசுவரன், பிரம்மா முதலான தேவர்களை நோக்கி நீங்கள் இனிமேல் ஒன்றிற்கும் அஞ்சவேண்டா கொடியராகிய ராக்ஷஸர்களைக் கொன்று உலகிற்குள்ள இடரை ஒழிப்பேன். நீங்களனைவரும் வானரங்களாகக் காடுமலை முதலிய விடங்களில் சேனையோடுசென்று பிறப்பீர்களாக. யானும்,

"மசரதமனையவர்வரமும்வாழ்வுமோர்
நிசரதகணைகளானீறுசெய்யயாம்
கசரததுரகமாக்கடல்கொள்காவலன்
தசரதன்மதலையாவருதுந்தாரணி"

அரக்கர்களைச் சாம்பலாக்கப் பூமியில் தசரதனுக்குப் புதல்வனாக அவதரிப்பேன் என்று அருளிச்செய்தான். இது கேட்ட தேவர்கள் 'நாம் ஸர்வேசுவரனால் ரக்ஷிக்கப்பட்டோம்' என்ற மகிழ்ச்சியால் ஆரவாரத்தோடு வாழ்த்தினார்கள். பின்,

"போயதென்பொருமலென்னவிந்திரனுவகைபூத்தான்
தூயமாமலருளோனுஞ்சுடர்மதிசூடினோனும்
சேயுயர்விசும்புளோருந்தீர்ந்ததென்சிறுமையென்றார்
மாயிருஞாலமுண்டோன்கலுழன்மேற்சரணம்வைத்தான்"

இந்திரன், எனது துக்கம் ஒழிந்ததென்று மகிழ்ச்சியடைந்தான். பிரம்மா முதலான தேவரெல்லாம் 'நமது சிறுமை இன்றே கழிந்ததென்றார்கள். அதன்பின் ஸர்வேசுவரன், 'நாம் தேவர்வேண்டு

கோளிற்காக இங்குவந்த கார்யம் பூர்த்தியுற்றது' என்று கெருட வாகனத்தின்மீது எழுந்தருளினன். அதன்மேல் பிர்ம்மதேவன், தேவர்களை நோக்கி முன்பே கரடிராஜனுக (ஜாம்பவானுக)த் தோன்றியவன் எனது அம்சமாம். நீங்களும் எம்பெருமான் நிய மனத்தின்படி பூமியில் அவதரிக்கக்கடவீர்களென்று சொன்னன்.

"தருவுடைக்கடவுள்வேந்தன்சாற்றுவானெனதுகூறு
மருவலர்க்கசனியானவாலியுமகனுமென்ன
இரவிமற்றெனதுகூறங்கவற்கிளையவனென்றேத
அரியுமற்றெனதுகூறுநீலனென்றறைந்திட்டானல்"

"வாயுமற்றெனதுகூறுமாருதியெனலுமற்றோர்
காயுமற்கடங்களாகிக்காசினியதனின்மீது
போயிடத்துணிந்தோமென்றார்புராரிமற்றியானேவாத
சேயெனப்புகன்றான்மற்றைத்திசையுளோர்க்கவதியுண்டோ"

இந்திரன், எனது அம்சம் பகைவர்க்கு இடியேறு போன்றவனுன வாலியாகவும், அவன் மகன் அங்கதனுகவும் ஆகக்கடது என்று சொன்னன். சூரியன், எனது அம்சம் சுக்ரீவனுகக்கடவது; என் றான். அக்கினி, எனது அம்சம் நீலனுகக்கடவது என்றான். சிவபிரா னும் வாயுவும் எமது அம்சம் அநுமானுகக்கடவது;என்றார். மற்றத் தேவர்களும்'நாங்கள் வானரங்களாய்ப் பூமியிற்பிறப்பதற்குத்துணிந் தோம்' என்றார்கள். ஸர்வேசுவரனும், தசரதசக்ரவர்த்திக்குப் புத்திரனுக அவதரித்தான்.

இங்கு, ஸர்வேசுவரன் தன்னியல் ஒழித்து மனிதனுக அவ தரித்ததும், தேவர்கள் தம்மியல் ஒழித்து வானரங்களாக வந்து பிறந்ததும் இராவண ஸம்ஹாரத்தின் பொருட்டேயாம். இங்ஙன மிருக்கத் தேவர்தலைவனுன இந்திரன் அம்சமாய் வந்துதித்த வாலி யானவன், லோககண்டகனுகிய இராவணனோடு சிநேகஞ்செய்து கொண்டான். இவன், இராவணனை நல்வழிப்படுத்தினுனோவெனில் அதுவுமில்லை. ஆதலால் இந்த வாலியின் நட்பானது, இராவணன் 'மஹா பலவானுகிய வாலியின் நட்பைப் பெற்றுவிட்டோம் இனி நம்மை வெல்லவல்லார் ஒருவருமில்லை' என்று செருக்குற்றுத் தடை யறத் தீமைகளைச் செய்துதிரிதற்கு ஹேதுவாயிருந்தது. இன்னும் இவன் நட்பு, 'இராவண ஸம்ஹாரத்திற்குத் துணையாகவருகிறே' னென்ற தன் ஸத்யத்தையும், ஆதியில் தேவர்கள்கூடி ஸர்வேசு

வரனை நோக்கி வேண்டிக்கொண்ட ப்ரார்த்தனையையும், அந்த ப்ரார்த்தனைக்கிரங்கி அநுக்ரஹித்த ஸர்வேசுவரனுடைய அநுக்ரஹத்தையும் அவனுடைய ஸத்யஸங்கல்பத்தையும் அழிக்க வல்லதாயிருந்தது. இத்தன்மையை மேற்கொண்டவனன இவனை உலகிற்கோர் இடையூருய் நின்ருன். இவனை ஒழித்தாலொழிய இராவணன் மாளான். இராவணன் மாண்டாலொழிய உலகு இன்புருது; என்பது கருதியே ராமபிரான் இராவணனுக்கு முன் வாலியை வானுலகிற்குப்த்தான்.

ஒரு அரசனுடைய சேனபதியாயிருப்பவன் செய்நன்றி மறந்து பகை அரசனேடு சேர்ந்துகொள்வானகில் அவனை அவ்வரசன் எவ்வகையான சிக்ஷைக்குட்படுத்தினும், அது தோஷமில்லையன்ருே! இத்தகைய அபராதிகளைத் தண்டிப்பதற்கு ஓர் முறையுண்டோ? இவனை எவ்வகையான குரூர தண்டனை செய்யினும் அது தர்மமேயாம். அதுபோல இங்கு முன் தேவரெல்லாங் கூடி 'நாம் பகவந் நியமனத்தால் இவ்வாறு செய்யக்கடவோம்' என்று தீர்மானித்திருந்த தீர்மானத்தை வாலி அடியோடு மறந்து பகைவனேடு நட்புக் கொண்டானதலால் இவன் ராஜவிரோதியாயும், பகவத் பாகவத விரோதியாயும் லோக விரோதியாயுமாகிருன். இத்தகைய மஹாபாபியை எவ்வகையான சிக்ஷை செய்யினும், அது, குற்றமாகாதென்பது தெற்றென விளங்குகிறதன்ருே!

இராமபிரான், தேவாம்சமுடைய வாலியை சிக்ஷித்தானதலால் தர்ம மார்க்கத்தைக் கடந்து நிற்பார் எவராயினும் அவரை சிக்ஷிப்பதும், அறத்தின் வழிநின்ருர் எவராயினும் அவரை ரக்ஷிப்பதும் அவனது ஸங்கல்பமென்ப தறியலாம். இன்னும் ஸர்வேசுவரன் தேவர்கள் வேண்டுகோளை முக்கியகாரணமாகக்கொண்டு அவதரித்திருப்பானகில் வாலி, இராவணனேடு நட்புக்கொண்ட காலத்து 'நீங்களெவ்வாருனும் ஒழிவீர்களாக' என்று உதாசினமாகவன்ருே சென்றிருப்பான்; அங்ஙனமின்றி வாலியை சிக்ஷித்தானதலால் தேவர்கள் வேண்டுகோள் வியாஜமென்பதும், தான் தன்னிச்சையாலேவந்து அவதரிக்கின்ருனென்பதும் விளங்குகின்றன.

"மரம்பொதச்சரந்துரந்துவாலிவீழமுன்னேர்நாள்
உரம்பொதச்சரந்துரந்தவும்பராளியெம்பிரான்
வரங்குறிப்பில்வைத்தவர்க்கலாதுவானமாளிலும்
நிரம்புநீடுபோகமெத்திறத்தும்யார்க்குமில்லையே"

இப்பாட்டால், வாலிவத விருத்தாந்தத்தால் இன்ன தத்வப்பொருள் அறியக்கிடக்கின்றது; என்பதுரைக்கப்படுகிறது. இதன் பொருளாவது:— முற்காலத்தில் சுக்ரீவனுடைய ஸந்தேகத்தைப் போக்குவதற்கு ஏழுமராமரங்களையும் தொளைபடும்படி அம்பெய்து வாலிவலியற்று விழும்படி அவன் மார்பு மாறுபாடுருவப் பாணந்தொடுத்த நித்யஸூரிகளின் தலைவனான ஸர்வேசுவரனது சிறந்த திருவுள்ளத்தில் 'இவன் நம்மடியான்' என்று கொண்டாலன்றி ஸத்யலோக முதலிய லோகங்களை ஆளுகின்ற பிர்ம்மாதிகளான எவ்வளவு சிறந்தவர்கட்கும் நிலைநின்ற கைங்கர்ய ஸுகமானது இல்லை என்பதாம். 'மாம்போதச் சாரந்தூரந்து' என்றதனால், தன் ரக்ஷணத்தில் சந்தேகித்தார்க்கும் அந்தச் சந்தேகத்தை ஒழித்து ரக்ஷிக்கும் சீலகுணமுடையவனென்பது விளங்குகிறது. 'வாலி வீழ உரம்போதச் சாரந்துரந்த உம்பராளி' என்றதனால், தன்னையே தஞ்சமாக அடைந்தவரிடத்திலுள்ள ப்ரபலவிரோதியைப் போக்கி இஷ்டஸித்தியைக் கொடுக்குமவனென்பது விளங்கும். 'வரங்குறிப்பில் வைத்தவர்க்கலாது' என்றதனால் தன்னடியார்க்குள்ள ஸம்ஸயத்தையும், விரோதியையும் ஒழிக்குமவனுடைய உத்தமமான ஹ்ருதயத்தினால் 'இவன்நம்மைச் சார்ந்தவன்' என்று அநுக்ரஹிக்கப்பெற்றவர்களை உஜ்ஜீவிப்பார்களென்பது அறியக்கிடக்கிறது. இதனால், மோக்ஷஸித்திக்கு அவன் அநுக்ரஹமே ஸாதனமென்பது விளங்கும். இது பற்றியே "உன்மனத்தால் என்னினைந்திருந்தாய்" என்று அருளிச்செய்தார். "யார்க்கும் எத்திறத்தும் நிரம்பு நீடுபோகமில்லை" என்றது, எவ்வளவு சிறந்தவர்களும் கர்மஜ்ஞாநாதி உபாயங்களால் நிலைநின்றகைங்கர்ய புருஷார்த்தம் பெறுதல் அரிதென்பதுணர்த்தியவாறு. ஆக இந்த வாலாற்றால், ஸர்வேசுவரன் தன்னடியார்க்குள்ள ஸம்ஸயத்தையும், விரோதியையும் போக்கி ரக்ஷிக்குமவனென்பது வெளியாகிறது.

ப. அ.